108—

காவேரி நகரில் குடிநீர், சாலை மற்றும் தெருவிளக்கு வசதி

***3467—திரு. எம். ஆண்டி அம்பலம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னர் திருமலை மாவட்டம், அடியனூத்து ஒன்றியம், காவேரி நகரில் குடிநீர், சாலை வசதி மற்றும் தெருவிளக்கு வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(1) இவ்வூருக்குள் தெருச்சாலை முன்பே அமைக்கப்பட்டுள்ளதால் புதிய சாலை அமைக்க அவசியம் இல்லை.

(2) இக்கிராமத்திற்கு 1995-96-ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ஒரு அடிகுழாய் அமைக்கப்பட்டு தண்ணீர் கொடுக்கப்பட்டு நல்லமுறையில் தற்போது இயங்கி வருகிறது.

(3) தெருவிளக்குகள் அமைக்க முன்பணம் செலுத்தப்பட்டுள்ளது. முன்னுரிமை அடிப்படையில் தெருவிளக்கு வசதிகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே உங்களுக்கு ஒன்றும் இல்லை.

வினா எண் 109, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

109—

காட்டாற்றுத் தண்ணீரைத் தேக்கிப் பயன்படுத்துதல்

***297—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—